1975 ஏப்ரல் 3]

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** ஒரேயொரு அங்கத்தினர்தான் எங்கள் கட்சியின் சார்பாகப் பேசியிருக்கிறார்கள். எங்கள் கட்சியின் சார்பாக எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும். மற்ற கட்சித் தலைவர்களுக்கும் எப்படிப் பகிர்ந்து சமமாகக் கொடுக்க முடியுமோ அந்த வகையில் பகிர்ந்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 15 உறுப்பினர்கள் பேர் கொடுத்திருக்கிறார்கள். ஐந்து அல்லது ஆறு நிமிஷந்தான் ஒரு உறுப்பினர் பேச முடியும். அதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியாது.

THIRU B. VENKATASWAMY : Sir, I request that time may be allotted to party strength . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 'அக்கார்டிங் டு பார்ட்டி' என்று வந்தால் உங்கள் பார்ட்டிக்கு நேரமே வராது. நீங்கள் ஏன் எழுந்து அதைக் கேட்கிறீர்கள்?

**திரு. கே. எ. வகாப் :** பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்தில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன்.

பயிருக்கு வரப்பு காவல், செம்பழத் தோட்டத்திற்கு வேலி காவல், மக்கள் சமுதாயத்திற்குப் போலீஸ் காவல்; அந்தப் போலீஸ் காவலுக்கு ஆதாரமான போலீஸ் துறைக்கு கலைஞர் காவலர்; கலைஞருக்கு நாம் காவலராக இருக்க வேண்டுமென்ற ஆவலை நான் சொல்ல விரும்புகிறேன்.

இரண்டு நாட்களுக்கு முன்பு நடைபெற்ற காவல் துறை விவாதத்தில் சூடும் இல்லை, சுவையும் இல்லை என்று சிலர் பேசிக் கொண்டார்கள்; சூடு இல்லை என்று ஒப்புக் கொள்கிறேன். சபை யில் மட்டும் சூடு இல்லை என்பதல்ல, வெளியிலும் துப்பாக்கி சூடு இல்லை. ஆகவே, இங்கு சூடு இல்லை. சுவை இல்லையென்று சொன்னார்கள். அதை ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை. அவலச் சுவை, நகைச் சுவை, வீரச் சுவை என்று எல்லாச் சுவை களிலும் பல அங்கத்தினர்கள் பேசிய நிகழ்ச்சிகள் நிறைய இருக்கின்றன.

[திரு. கே. எ. வகாப்] [1975 ஏப்ரல் 3

அதுமட்டுமல்ல. நாங்கள் பேசுகிறபோது ஆளும் கட்சியைப் பாராட்டுகின்ற நேரத்தில் பாராட்டுகிறோம். அப்படி நாங்கள் பாராட்டிப் பேசிவருவது மாற்றுக் கட்சிக்காரர்களுக்கு, குறிப்பாக, எதிர்க்கட்சிக்காரர்களுக்கு எவ்வளவு மன வேதனை கொடுத்திருக்கிறது என்பது தெரிகிறது. அதன் காரணமாக எங்களுடைய முஸ்லிம் லீக் கட்சியை, கட்சி அங்கத்தினரை வேதனைப் படுத்தும் அளவுக்குச் சில சொற்களைச் சொல்லியிருக்கிறார்கள். மிகவும் பழம் பெரும் தலைவர்கள் எல்லாம் அப்படிப்பட்ட சொற்களை உபயோகப்படுத்தினார்கள் என்பதை எண்ணும்போது மிகவும் வேதனையாக இருக்கிறது.

எங்கள் கட்சிக்கு என்று ஒரு கொள்கையை வைத்திருக்கிறோம். பாராட்ட வேண்டியதைப் பாராட்டுகிறோம், கண்டிக்க வேண்டியதை நிச்சயமாகக் கண்டிக்கிறோம். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இனிமேலாவது நடக்காமல் இருக்கவேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

குறிப்பாக, டாக்டர் ஹாண்டே அவர்கள் எங்கள் கட்சிக் கொறடாவை 'ஆளும் கட்சியின் கருவியாக இருக்கிறார்' என்று சொன்னார்கள். ஆளும் கட்சியின் கருவி என்று சொன்னதற்காக நாங்கள் சந்தோஷப்படுகிறோம். அவர் எங்கள் கட்சியின் கொறடா. அந்தக் கொறடாவை டாக்டர் கலைஞரிடத்தில் நாங்கள் கொடுத்து எதிர்க்கட்சியின் விஷப் பல்லைப் பிடுங்க உபயோகப் படுத்துவதைக் காணச் சந்தோஷப்படுகிறோம். கட்சிகளைத் தாக்கும்போது உள்நோக்கம் கற்பித்துப் பேசுவது வேதனைப் படக்கூடியது என்று சொல்லிக் கொள்கிறேன்.

இன்றையதினம் காவல் துறையானது உலகத்திலேயே சிறப்பாக இயங்கி வருகிற ஸ்காட்லண்ட் யார்டு, ரஷ்யாவிலுள்ள காவல் துறை போன்ற காவல் துறைகளுக்கு ஈடாக, அவர்களைப் போல் விஞ்ஞான வசதிகளே இல்லாமல், தமிழகக் காவல் துறை சிறப்பான முறையில் செயல்படுகிறது என்பதை எல்லோரும் ஒரு மனதாக ஒப்புக்கொள்கிறார்கள். ஆளும் கட்சிக்காரர்களை விட எதிர்க்கட்சிக்காரர்கள் மிக முக்கியமாக ஒப்புக் கொள்ளுகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இருந்தாலும் கூட, அதிலே இருக்கின்ற, ஏற்படுகின்ற குறைகளையும் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.